# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

# OS.No.77/2024

dated : 19.08.2025

P.W. 2

Name விவேகானந்தன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் EEE பட்டய படிப்பு முடித்துள்ளேன். நான் சாட்சியமளிக்க அழைப்பாணை ஏதும் வரவில்லை. வாதி அழைத்ததன்பேரில்தான் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். முதல் விசாரணை வாக்குமூலத்தை படித்துப் பார்த்துதான் கையொப்பம் செய்தேன் அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நான் எலக்ட்ரிக்கல் மற்றும் பிளமிங் வேலை செய்து வருகிறேன். நான் கேட்கும் நபர்களுக்கு வேலை செய்து கொடுப்பேன். வாதி நிறுவனத்தில் இருப்பேன். தனி நபர் அழைத்தாலும் வேலைக்குச் செல்வேன். ஒரு கட்டிடத்தை கட்டத் துவங்கும் முன்பே எலக்ட்ரிசனுக்கு வேலை ஏதும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி வீட்டிற்கு அடித்தளம் அமைக்கும் முன்பே நான் அங்கே வேலைக்குச் சென்றிருந்தேன் என்றால் தற்காலிக இணைப்பு வழங்குவதற்காக வேலை பார்க்கச் சென்றேன். ஒப்பந்தம் எழுதும் நேரத்தில் நான் உடனிருக்கவில்லை. வாதி சொல்லித்தான் பிரதிவாதி வீடு கட்டும் வேலை நடக்கப்போவது தெரியும். எனக்கு ஒப்பந்தம் பற்றி

எதுவும் தெரியாது என்றும் என்னை பொய் சாட்சி சொல்வதற்காக வாதி அழைத்து வந்திருந்தார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.08.19 18:05:18 +0530